துணை ஆணையாளர் –1 , உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.அ. ஏகாம்பரம்.,

செ.மு.ஆணை எண்.அ4/632/2021 நாள் : 10.03.2021

பொருள்: நிர்வாகம் – உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – பணித்தொகுதி–IV – 2018–2019 மற்றும் 2019–2020 – தட்டச்சர் பட்டியல் பெறப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறைப்படுத்துதல் – ஆணை பிறப்பித்தல்.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 5562/PSD-F1/2020, நாள் : 24.12.2020.
2. துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறைகள் எண். அ4/632/2021, நாள் : 11.01.2021.

*****

ஆணை:

பார்வை–1ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின் வாயிலாக, இத்துறைக்கு தட்டச்சர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கு, பார்வை–2ல் கண்டுள்ள செயல்முறை ஆணையில் தட்டச்சராக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

அவ்வாறு பணி நியமனம் வழங்கப்பட்ட நபர்களில், இத்துறைப் பணியில் சேர்ந்து தட்டச்சர்களாக பணிபுரிந்து வரும் கீழ்காணும் நபர்களுக்கு, தட்டச்சர் பதவியில், அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள 2018–2019 மற்றும் 2019–2020 காலங்களுக்கான பணித்தொகுதி–IV பணி நியமனம் குறித்த ரிட் மனுக்களில் பிரகடனப்படுத்தப்படும் தீர்ப்பு முடிவுக்கு உட்பட்டு நிபந்தனை அடிப்படையில், பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண். | தட்டச்சர் பெயர் திரு/திருமதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | P. கனகராஜ் | 21.01.2021 மு.ப. | 21.01.2021 மு.ப. |
| 2. | C. சபரி | 18.01.2021 மு.ப. | 18.01.2021 மு.ப. |
| 3. | S. விக்னேஷ் | 20.01.2021 மு.ப. | 20.01.2021 மு.ப. |
| 4. | R. அன்புக்கரசி | 22.01.2021 மு.ப. | 22.01.2021 மு.ப. |
| 5. | S. லீலா | 20.01.2021 மு.ப. | 20.01.2021 மு.ப. |
| 6. | G. தங்கம் | 18.01.2021 மு.ப. | 18.01.2021 மு.ப. |

பணி வரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

தகுதிகாண் பருவகாலத்திற்குள், தொழில் நுட்ப கல்வித்துறையினரால் நடத்தப்பெறும் Certificate Course in Computer on Office Automation பயிற்சியினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

துணை ஆணையாளர் –1

பெறுநர்
சம்பந்தப்பட்ட தட்டச்சர்கள்

Scanned with OKEN Scanner

நகல்

1. ஆணையாளர் / இணை ஆணையாளர் அவர்களின் மேசைக்கு.
2. துணை ஆணையாளர் –1 / துணை ஆணையாளர் –2 / உதவி ஆணையாளர்– 1, உதவி ஆணையாளர்– 2, ஆணையாளர் அலுவலகம்.
3. துணை ஆணையாளர் (ந) வடக்கு / தெற்கு, சென்னை–05.
4. உதவி ஆணையாளர், சிதம்பரனார், திருவொற்றியூர், ஆயிரம் விளக்கு மற்றும் மயிலாப்பூர் மண்டலங்கள்.
   (சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு சார்வு செய்து சார்வு நகல் அனுப்பிடவும், பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு அவ்விவரத்தினை தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).
5. கண்காணிப்பாளர், 'ச' பிரிவு, ஆணையாளர் அலுவலகம்.
6. ஆணையாளர் அலுவலக தகவல் பலகைக்கு.
7. 'அ4' இருப்பு கோப்பு

Scanned with OKEN Scanner